1978 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அவர்கள் தருவதாக ஒப்புக்கொண்டதாக பதில் இன்னும் வரவில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, சாதாரண ஜனங்கள் இடத்தில் இப்படி வரி பாக்கியிருந்தால் ஜப்தி நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கிறார்கள். இந்த பாக்கி 10 வருஷமாக இருக்கிறது. இப்படி 10 வருஷமாக விட்டு வைத்திருப்பதற்கு எந்த அதிகாரி காரணம்? அதற்கு எந்தச் சர்க்கார் பொறுப்பு? ஏன் இப்படி 10 வருஷமாக விட்டுவைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, 10 வருஷம் ஏன் விட்டு வைத்தார்கள், யார் பொறுப்பு என்று கேட்கிறார்கள். அதிகாரிகள் இப்போது பல்வேறு இடங்களில் இருக்கிறார்கள்; சென்னையிலும் இருக்கிறார்கள். இருந்தாலும் இப்படி எதிர்காலத்தில் நடக்கக் கூடாது என்று சொல்லப் பட்டிருக்கிறது. அவர்களுடைய குற்றம் பெரிதாக இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம்.

* வினா எண் 130— திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சியில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ரூ. 41.85 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட வருவாய் வாரியம் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, இந்தச் செயற் குறிப்பை உடனடியாகப் பரிசீலித்து, விரைவில் கட்டடத்தைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, புதிதாக வருவாய்த் துறையில் கட்டடம் கட்ட ஆண்டுதோறும் அரசுக்குக் குறிப்பு அனுப்பப்படுகிறது. வருவாய்த் துறைக்கு எவ்வளவு பணம் ஒதுக்குகிறார்களோ அதைப் பொறுத்து, எந்த எந்த இந்த இடத்தில் உடனயாகக் கட்டடம் கட்ட வேண்டிய தேவை இருக்கிறதோ அதை உத்தேசித்து கட்டடம் கட்ட அரசு முயற்சி செய்யும்.

[1978 செப்டம்பர் 11

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, புதிய கட்டடம் அதே சுற்றமைக்குள் கட்டப்பட இருக்கிறதா அல்லது வேறு இடத்தில் கட்டப்பட இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அது பற்றி விவரம் இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, புதிதாகக் கட்டப்படும் இந்தக் கட்டடம் 'கான்ட்ராக்ட்டுக்கு' விடப்படுமா அல்லது அரசுத் துறையிலிருந்து கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இன்னும் பணமே ஒதுக்கப்படவில்லை. பணம் ஒதுக்கீடு செய்த பிறகு அது பற்றி யோசிக்கப்படும்.

திரு. கூ. சு. முருகேசன் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சி மன்றம் அங்கே அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதைப் போல, திருச்சியில் தாலுக்கா அலுவலகம் மங்கம்மா காலத்தில் கட்டப்பட்ட கட்டடத்தில் இருக்கிறது ; அதையும் மாற்றி யமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அங்கு மட்டுமல்ல, மாநிலத்திலே பல இடங்களில் தாலுக்கா அலுவலகங்கள் பழைய கட்டடங்களில் இருக்கின்றன. அவை யெல்லாம் 10 ஆண்டு, 20 ஆண்டு, 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டவைகள். அப்படிப்பட்ட பழைய கட்டடங்களை எல்லாம் அரசு ஆராய்ந்து பார்த்து, எந்தக் கட்டடம் மிகப் பழையதாக இருக்கிறது ; எந்தக் கட்டடம் போதுமான அளவில் இல்லை ; எந்தக் கட்டடம் புயல் வந்தால் விழுந்து விடும் என் பதைப் பார்த்து, அதற்கு முதலில் கட்டடம் கட்ட முன்னுரிமை அளிக்கப்படும். இதற்கு முன்னால் இருந்த அரசும் அந்த வகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நினைக்கிறேன். இந்த அரசு வந்தவுடனேயே, எல்லாத் தாலுக்கா அலுவலகங் களையும் ஒரே நேரத்தில் புதுப்பிப்பது என்பது முடியாத ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் 40 லட்சம், ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படவிருப்பதை விட முதலில் பல்வேறு வட்டாரங்களில் குறைந்த செலவில் புதிய கட்டடங்களைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா? இப்போது பல புதிய வட்டாரங்களை அமைத்து இருக்கிறோம். அவைகளுக்கு எந்தவிதமான அலுவலகமும் இல்லாமல் 15 மைல், 20 மைல் தூரத்திலிருக்கிற பழைய அலு வலகத்திலேயே பணிகள் நடைபெறுகின்றன. அதனால் முறை

1978 செப்டம்பர் 11]

யாக வேலை நடக்கவில்லை. ஆகவே, தாலுக்காவில் அல்லது அந்தந்த வட்டாரத்தில் அலுவலகமும், பணியாளர் குடியிருப்பும் கட்ட 5 லட்சம், 10 லட்சம் ரூபாய் ஒதுக்கி செயல்படுத்தும் திட்டத்தை இந்த அரசு உருவாக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அலுவலர்கள் எல்லாம் அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே குடியிருக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் அலுவலர்களை—மாவட்ட அலுவலகம், வட்டார அலுவலகம் அல்லது பிர்க்கா அலுவலகம் போன்றவைகளில் பணியாற்றக்கூடியவர்களை அவர்கள் பணியாற்றும் அலுவலகத்திற்குப் பக்கத்திலே குடியிருக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் இன்று அல்ல 10, 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழக்கத்தின் காரணமாக பல்வேறு இடங்களிலிருந்து அலுவலகங்களுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக மாற்ற முடியாது. இருந்த போதிலும் மாற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இடத்தைப் பொறுத்தவரையில் அரசுக்கு இருக்கும் நிதி வசதியைப் பொறுத்து ஒன்றன்பின் ஒன்றாக அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டிக் கொடுக்க இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Air-strip near Palani.

* Q. No. 131—THIRU S. GANESAN : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :—

(a) whether the Hindu Regligious and Charitable Endowments Administration has incurred expenditure for laying an air-strip near Palani during February-March, 1977; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) இல்லை.
(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

அரசுத்தரப்பு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள்.

* வினா எண் 132—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசுத் தரப்பில் பிரச்சார நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துபவர்களை தேர்ந்தெடுக்கப் பின்பற்றப்படும் நடைமுறை விதிகள் யாவை ?